]1982 மார்ச் 25

நகரசபையிலே இன்னும் இருக்கின்றது. எனவே இந்த நூற்றாண்டு விழாவினை ஒட்டி மீண்டும் அந்தத் திட்டத்தை அமல்படுத்தி யார் யாருக்கு காச நோய் இருக்கின்றது என்று எக்ஸ்ரே படம் மூலம் கண்டுபிடிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, திரு. பாலன் அவர்களுடைய யோசனை மிக நல்ல யோசனைதான். தீவிரமாக அதற்காக ஸ்கிரீனிங் அந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் வந்திருந்தார்கள்—இன்டென்சிவ் ஸ்கிரீனிங், மாஸ் ஸ்கிரீனிங் என்ற வகையிலே மக்கள்நல்வாழ்வுத் துறை இலாக்காவும், மாநகராட்சியும் இணைந்து பணிகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடவாசல் அரசு மருத்துவமனை.

* வினா எண். 658 திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனையை வட்ட தலைமை மருத்துவ மனையாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பிலுள்ளதா ?

(ஆ) ஆம், எனில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இருக்க வேண்டிய வசதிகள் குறித்து வரையறைகள் ஏதும் இல்லை. தேவைக்கேற்றவாறு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் ஒரு துணை வட்டமாக இருந்த குடவாசல், 1981-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் வட்டமாக உயர்த்தப்பட்டதால் அங்கு செயல்படும் அரசினர் மருத்துவமனை ஒரு வட்ட தலைமையிட மருத்துவமனையாக அழைக்கப்படுகிறது.

திரு. இரெ, இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, குடவாசல 1981 ஆம் ஆண்டு முதல் தனி வட்டமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே இருக்கின்ற மருத்துவமனை கட்டிட வசதி இல்லாமல் இருக்கின்றது. அங்கே உள்நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறக்கூட வசதிகள் இல்லை. மேலும் குடவாசலிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் எந்த விதமான வசதியான மருத்துவமனையும் கிடையாது. ஆகவே அதனை

982 மார்ச் 25)

ஒரு வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி உள்நோயாளிகள் தங்கி சிகிச்சைப் பெற ஏற்பாடுகள் செய்து கட்டிட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர், எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு நான் பதில் அளிக்கின்றபோதே அழைக்கப்படுகின்றது என்று சொல்லி இருக்கிறேன். எனவே இனிமேல் தான் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம், ஏற்கனவே 16 படுக்கைகள் கொக்கக்கூடிய மருத்துவமனையாக இருக்கின்றது. 1980-81 ஆம் ஆண்டு 2,006 பேர் உள்நோயாளிகளாக அதாவது இன்பேஷன்ட்டாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இருக்கிறார்கள். ஆனால் புற நோயாளி என்ற வகையிலே அவுட் பேஷன்ட் என்ற வகையிலே 40,833 பேர் அதாவது சராசரியாக ஒரு நாளை நாளைக்கு 110 பேர் வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே மருத்துவமனை இயங்குகின்றது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அந்த மருத்துவமனையினை தாலுக்கா மருத்துவமனை என்று அழைக்கக்கூடிய தகுதியினை அது பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்து நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. இரெ. இராசமாணிக்கம்: அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்கள் சொல்லுவதிலிருந்து சுற்று வட்டாரத்தில் எந்த விதமான மருத்துவமனையும் இல்லை என்று தெரிகிறது. ஏராளமான மக்கள் வந்து சிகிச்சை பெறக்கூடிய வகையில் அந்த மருத்துவமனை அமைந்திருப்பதால்—இப்போது அங்கே இரண்டு மருத்துவர்கள் தான் இருக்கிறார்கள் அதிகமாக டாக்டர்களை நியமித்து கட்டட வசதி செய்து கொடுத்து, அங்கே தனியாக எக்ஸ்ரே பிரிவும் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்ய முன் வருமா?

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே; இப்போது அஸிஸ் டென்ட் சர்ஜன்ஸ் இரண்டு பேர்களும், இளநிலை மருத்துவர் ஒருவரும், மருந்தாளர் ஒருவர்; மகப்பேறு உதவியாளர் என்று ஸ்டாப் பாட்டேர்ன் காடுத்திருக்கிறார்கள், உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தைப் பொறுத்து அதை 50 படுக்கைகள் கொண்ட ஒரு தாலுக்கா மருத்துவமனை இலக்கணத்திற்குரிய மருத்துவமனையாக மாற்றிய பிறகு அந்த விஷயங்களை ஆராய வாய்ப்பிருக்கிறது.